# டிசம்பர் – 04 – செவ்வாய்

புனித தமசீன் அருளப்பர்

"ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றைமறைத்து,குழந்தைகளுக்குவெளிப்படுத்தினீர். ஆம்,தந்தையே, இதுவேஉமதுதிருவுளம்"*லூக். 10:21*

---

## முதல் வாசகம் : ஏசாயா 11 : 1 - 10

ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர்விடும் அதன் வேர்களிலிருந்து கிளை ஒன்று வளர்ந்து கனிதரும். ஆண்டவரின் ஆவி அவர்மேல் தங்கியிருக்கும் ஞானம், மெய்யுணர்வு, அறிவுரைத்திறன், ஆற்றல், நுண்மதி, ஆண்டவரைப்பற்றிய அச்ச உணர்வு-இவற்றை அந்த ஆவி அவருக்கு அருளும். அவரும் ஆண்டவருக்கு அஞ்சி நடப்பதில் மகிழ்ந்திருப்பார். கண் கண்டதைக் கொண்டு மட்டும் அவர் நீதி வழங்கார் காதால் கேட்டதைக் கொண்டு மட்டும் அவர் தீர்ப்புச் செய்யார் நேர்மையோடு ஏழைகளுக்கு நீதி வழங்குவார் நடுநிலையோடு நாட்டின் எளியோரது வழக்கை விசாரிப்பார் வார்த்தை எனும் கோலினால் கொடியவரை அடிப்பார் உதட்டில் எழும் மூச்சினால் தீயோரை அழிப்பார். நேர்மை அவருக்கு அரைக்கச்சை. உண்மை அவருக்கு இடைக்கச்சை. அந்நாளில், ஓநாய் செம்மறியாட்டுக் குட்டியோடு தங்கியிருக்கும் அக்குட்டியோடு சிறுத்தைப்புலி படுத்துக்கொள்ளும். கன்றும், சிங்கக்குட்டியும், கொழுத்த காளையும் கூடி வாழும் பச்சிளம் குழந்தை அவற்றை நடத்திச் செல்லும். பசுவும் கரடியும் ஒன்றாய் மேயும் அவற்றின் குட்டிகள் சேர்ந்து படுத்துக்கிடக்கும் சிங்கம் மாட்டைப் போல் வைக்கோல் தின்னும் பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பின் வளையில் விளையாடும் பால்குடி மறந்த பிள்ளை கட்டுவிரியன் வளையினுள் தன் கையை விடும். என் திருமலை முழுவதிலும் தீமை செய்வார் எவருமில்லை கேடு விளைப்பார் யாருமில்லை ஏனெனில், கடல் தண்ணீரால் நிறைந்திருக்கிறது போல, மண்ணுலகம் ஆண்டவராம் என்னைப் பற்றிய அறிவால் நிறைந்திருக்கும். அந்நாளில், மக்களினங்களுக்குச் சின்னமாய் விளங்கும் ஈசாயின் வேரைப் பிறஇனத்தார் தேடி வருவார்கள் அவர் இளைப்பாறும் இடம் மாட்சி நிறைந்ததாக இருக்கும்.

**பதில்பாடல் :** ஆண்டவருடைய காலத்தில் நீதியும் சமாதானமும் தழைத்தோங்கும்

## நற்செய்தி : லூக்கா 10 : 21 - 24

அந்நேரத்தில் இயேசு தூய ஆவியால் பேருவகையடைந்து, "தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம், தந்தையே, இதுவே உமது திருவுளம்" என்றார். "என் தந்தை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார். தந்தை யாரென்று மகனுக்குத் தெரியும் மகன் யாருக்கு வெளிப்படுத்த விரும்புகிறாரோ அவருக்கும் தெரியும். வேறு எவரும் தந்தையை அறியார்" என்று கூறினார். பின்பு அவர் தம் சீடர் பக்கம் திரும்பி அவர்களிடம் தனியாக, "நீங்கள் காண்பவற்றைக் காணும் வாய்ப்புப் பெற்றோர் பேறுபெற்றோர். ஏனெனில் பல இறைவாக்கினர்களும் அரசர்களும் நீங்கள் காண்பவற்றைக் காண விரும்பினார்கள். ஆனால், அவர்கள் காணவில்லை. நீங்கள் கேட்பவற்றைக் கேட்க விரும்பினார்கள் ஆனால் அவர்கள் கேட்கவில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்று கூறினார்.

**தியானம்:** நகர வீதிகளை அலங்கரிக்கும் வர்ண மின்விளக்குகள். வியாபாரத் தளங்கள் எங்கும் வர்ண வர்ண அலங்கரிப்புக்கள். இல்லங்களிலும், இல்லங்களின் வெளிப்புறங்களிலும் அவரவர் வசதிக்கேற்ப விதம்விதமான அலங்கரிப்புக்கள். குழந்தைகள் "சாந்தா"என்னும் பெயரில் யாரோ ஒருநல்லவர் தமக்குப் பரிசில்களை அள்ளி வழங்கவருவார் எனக்காத்திருக்கும் வேளையிது. ஆகமொத்தம் ஜாதி,மத, இன,மொழி,நிறபேதமின்றிஅனைவரும் ஏதோஒருவகையில் 'கிறிஸ்மஸ்' பண்டிகையைக் கொண்டாடஆவல் கொண்டிருக்கும் காலமிது. கிறிஸ்துவை இன்னும் அறியாதபலருக்கும் இது ஒரு மகிழ்வான பண்டிகைக் காலம். கிறிஸ்துவை அறிந்தும் தமது சொந்த இலாபத்துக்காக இக்காலத்தை வியாபார நோக்கோடு பயன்படுத்துபவர் பலருக்கும் இது அதிக இலாபம் ஈட்டித்தரும் காலம். அதனால்தான் இன்று கிறிஸ்மஸ் பண்டிகை இன்று வியாபாரகரமாக வேமாறிவிட்டிருப்பதைக் காண்கின்றோம். கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டநமக்கோ இது திருவருகையின் காலம். இறைமகன் இயேசுவின் முதல் வருகையான'கிறிஸ்து பிறப்பை'அதாவதுஉலகாளும் தேவன் ஒருகுழந்தையின் வடிவிலே நம்மிடையே உதித்ததை நினைவு கூர்ந்து கொண்டாடவும், ஞானமேவடிவான அந்தக் குழந்தை நமக்குக் கற்றுத்தந்தவாழ்க்கைப் பாடத்தை நமது வாழ்வாக்கிக் கொள்வதோடு, மக்களினங்கள் அனைத்திற்கும் நீதி வழங்கஅவர் மீண்டும் வரவிருக்கின்றார் என்ற உண்மையைநாம் விசுவசிப்பதோடு மட்டுமல்லாது இந்த உண்மையை கிறிஸ்துவை இன்னும் அறியாத மக்களுக்குப் பறைசாற்றி மக்களினங்கள் அனைத்தையுமேஅவரது இரண்டாவது வருகைக்காக ஆயத்தம் செய்வதுநம் கடமை என இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு அறிவுறுத்துகின்றன. கள்ளங்கபடமற்ற குழந்தைஉள்ளம் படைத்தோர் அனைவருக்கும் இக்காலம் அமைதியும், சமாதானமும், மகிழ்ச்சியும் தருகின்றகாலமாக இது அமையட்டும்.